பாடநெறிகளுக்கான வரவுகள்	1,540,000	1,430,000
திறைசேரியின் ரசீதுகள் வருமானத்தில் கண்டறிதல்	15,643,055	15,713,792
செலாவணி விகிதங்களை சீராக்கல்	-	725,518
விரிவுரை மண்டபத்தின் வாடகை வருமானம்	128,000	84,375
விளம்பரப் பலகைகள்	582,000	310,500
வருடாந்த பதிவுக் கட்டணம் - வெளிநாட்டு திரைப்பட இறக்குமதியாளர்களுக்கு	1,002,000	1,000,000
வெளிநாட்டு ஆவணப்படங்களுக்கான ஒப்புதல்	3,264,500	3,256,000
புலனாய்வு உத்தியோகத்தர் கிடைப்பனவுகள்	904,500	1,276,500
டென்டர் வைப்புக் கட்டணம்	-	146,456
ஊழியர் பாடநெறிகளுக்கு வழங்கிய நிதியை மீள அறவிடல்	60,000	-
	140,925,219	**91,924,679**

குறிப்பு 10A

ஜனாதிபதி சினிமா விருது வழங்கும் விழா வரவுகள்	**7,954,000**	**-**
	148,879,219	**91,924,679**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைக்கான குறிப்புகள்

குறிப்பு (11 -நிலையான சொத்து சொத்து, இயந்திராதிகள் மற்றும் உப	செலவு	முந்தைய ஆண்டின் செலவுகளை சரிசெய்தல்	வருடத்திற்கான சேர்ப்புகள்	வருடத்தினுள் நீக்கப்பட்டவை	செலவு	திரட்டப்பட்ட தேய்மானம்	முந்தைய ஆண்டின் தேய்மானத்தினை சரிசெய்தல்	ஆண்டிற்கான தேய்மானம்	திரட்டப்பட்ட தேய்மானம்	தேறிய மதிப்பு
	2023.01.01				2023.12.31	2023.01.01				2023.12.31
	ரூபா'		ரூபா'	ரூபா'	ரூபா'	ரூபா'		ரூபா'	ரூபா'	ரூபா'
01. தீர்வை விலக்கப்பட்ட காணி	174,343,458	-	-	-	174,343,458	-	-	-	-	174,343,458
02. தீர்வை விலக்கப்பட்ட கட்டடம்	150,748,918	3,969,382	111,557	-	154,829,858	85,653,671	(333,108)	5,740,682	91,061,244	63,768,613
03. சினிமா கட்டடத் தொகுதி	123,513,361	-	9,148,930	-	132,662,291	94,049,784		6,026,277	100,076,061	32,586,230
04. மின் சினிமா உபகரணங்கள்	331,451	-	-	-	331,451	331,449		-	331,449	2
05. தளபாடங்கள், நிறுவுதல் மற்றும் பெ	23,449,913	82,965	307,665	-	23,840,543	19,560,099	63,836	779,551	20,403,486	3,437,058
06. அலுவலக உபகரணங்கள்	29,836,003	(82,965)	268,750		30,021,788	23,045,702	(63,842)	1,331,882	24,313,743	5,708,046
07. மோட்டார் வாகனங்கள்	40,051,450		-	-	40,051,450	10,013,948		10,012,500	20,026,448	20,025,002
08. திரைப்படக் காப்பகப்படுத்தல்	2,104,455		-	-	2,104,455	1,971,133		133,321	2,104,454	1
09. சைக்கிள்கள்	18,281		-	-	18,281	18,277		-	18,277	4
10. திரைப்பட உபகரணங்கள்	910,689		-	-	910,689	910,669		-	910,669	20
11. புறத்தெறிவு உபகரணங்கள்	1,364,052	1,645,000	-	-	3,009,052	882,176		252,885	1,135,061	1,873,991
12. கலையக இயந்திரங்கள்	106,062,371	-	-	-	106,062,371	94,036,086		1,922,580	95,958,666	10,103,706
13. திரைப்படக் கல்வி உபகரணங்கள்	2,234,250	-	56,925	-	2,291,175	1,528,212		229,118	1,757,330	533,846
14. நலன்புரி உபகரணங்கள்	210,677	-	-	-	210,677	204,389		1,572	205,961	4,716
	655,179,330	**5,614,382**	**9,893,827**	**-**	**670,687,539**	**332,205,596**	**(333,114)**	**26,430,366**	**358,302,848**	**312,384,692**
11A புலனாகாதவை										
புலனாகாத சொத்துக்கள்	2,486,950		-		2,486,950	1,292,720		497,390	1,790,110	696,840
	2,486,950	**-**	**-**	**-**	**2,486,950**	**1,292,720**	**-**	**497,390**	**1,790,110**	**696,840**
11B முடிவுறாத பணிகள்	**(குறிப்பு 2.4)**									
1 கட்டடங்கள்	18,804,857	(4,136,138)		1,324,997	13,343,722	-	-	-	-	13,343,722
2 அலுவலக உபகரணங்கள்	-	-			-	-	-	-	-	-
3 குளிரூட்டிகள்	7,149,211	**0**			7,149,211	-	-	-	-	7,149,211
4 புலனாகாத சொத்துக்கள்	17,330,000				17,330,000	-	-	-	-	17,330,000
	43,284,067	**(4,136,138)**	**-**	**1,324,997**	**37,822,933**	**-**	**-**	**-**	**-**	**37,822,933**
மொத்த சொத்துக்கள்	**700,950,347**	**1,478,245**	**9,893,827**	**1,324,997**	**710,997,422**	**333,498,316**	**(333,114)**	**26,927,756**	**360,092,958**	**350,904,464**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைக்கான குறிப்புகள்

		2023 re'	2022 re'
குறிப்பு (12			
நீண்ட கால முதலீடுகள்			
நிலையான வைப்பு		-	141,687,000
பங்குகள் மீதான முதடுகள் - அசோசியேட்டட் நியூஸ்பேப்பர்ஸ் சிலோன் லிமிடெட் (ANCL)		127,000	127,000
(குறிப்பு 2.2.8)		127,000	141,814,000
குறிப்பு (13			
குறுகிய கால முதலீடுகள்			
தேசிய சேமிப்பு வங்கியில் வைப்பு - ஊழியர்கள்		5,000	5,000
REPO வைப்புத்தொகை		-	-
திறைசேரி உண்டியல்கள்		291,392,189	82,614,991
		291,397,189	82,619,991
குறிப்பு (14			
பங்குகள்			
திரைப்படங்கள்		5,253,887	5,253,887
வர்த்தக அலுவல்கள்		4,596,811	5,203,343
கலையரங்கம்		1,697,363	1,697,363
கலையக பராமரிப்பு உதிரிப் பாகங்கள்		1,472,575	1,472,575
காகிதாதிகள் மற்றும் பிற		2,352,662	2,151,953
		15,373,298	15,779,121
மெதுவாக சந்தைப்படுத்தப்படும் மற்றும் சந்தைப்படுத்தப்படாத பங்குகளுக்கான ஒதுக்கீடு		(8,597,176)	(8,597,176)
		6,776,122	7,181,945
குறிப்பு (15A			
கடனாளிகள்			
திரையரங்குகள்	389,961,318		
^-& கூடுதல் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு	(161,210,580)		
^-& கடனாளிகளுக்கான சேதங்களை சரிசெய்தல் குறிப்பு 16a	(122,147,189)	106,603,549	126,592,045
குறிப்பு (15B			
தயாரிப்பாளர்கள்	88,503,920		
^-& தயாரிப்பு கடன் வட்டியின் ஒதுக்கீடு	(4,618,806)		
^-& கடனாளிகளுக்கான சேதங்களை சரிசெய்தல் குறிப்பு **16ஏ**	(68,670,380)	15,214,734	10,477,259
		121,818,283	137,069,304
குறிப்பு (16			
இதர கடனாளிகள்			
பிற			
பெறத்தக்க தள்ளுபடித் தொகை - ரித்மா சபை		248,044,744	198,699,363
பெறத்தக்க வட்டி ^நிலையான$ ரிபோ&		-	22,047,838
பெறத்தக்க கூட்டுத்தாபன நம்பிக்கை நிதி - ரித்மா சபை		30,755,284	25,942,686
பெறத்தக்க பணக் கணக்கு 224		6,653,848	20,759,870
பல்வேறு கடனாளிகளுக்கான இழப்புகளை சரிசெய்தல் குறிப்பு 16 ஏa		(14,272,694)	(13,372,488)
ஊழியர் கடன் சொத்துக் கணக்கு		2,848,384	-
ஊழியர் சம்பளம் மற்றும் வேதனக் கட்டுப்பாட்டுக் கணக்கு		1,797,498	1,830,870
12 மாதங்களினுள் பெறத்தக்க ஊழியர் கடன்		598,450	2,850,400
		276,425,515	258,758,538
குறிப்பு (16 -1			
12 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் அறவிடப்படத்தக்க ஊழியர் கடன்		18,878,755	17,804,373

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைக்கான குறிப்புகள்

அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கீட்டு அட்டவணை

குறிப்பு (16 ஏ

கடனாளிகள்	மொத்தம்	ஒப்புக் கொள்ளப்படாத மற்றும் ீட்டெடுக்க முடியாதவை	மீட்டெடுக்க முடியுமானது	5% ஒதுக்கீடு	மொத்த ஒதுக்கீடு
	2023 ரூபா'	ரூபா'	ரூபா'	ரூபா'	ரூபா'
திரையரங்குகள்	389,961,318	108,051,709	281,909,609	14,095,480	122,147,189
தயாரிப்பாளர்கள்	88,503,920	67,626,509	20,877,411	1,043,871	68,670,380
பிற	285,453,877		285,453,877	14,272,694	14,272,694
ஊழியர்களின் கடன்கள்	19,477,205	-	19,477,205	-	-
	783,396,319	**175,678,218**	**607,718,101**	**29,412,045**	**205,090,263**

		திரையரங்குகள்	தயாரிப்பாளர்கள்	பிற
இருப்பு முன்/ கொ	205,026,677	123,233,150	68,421,039	13,372,488
இலாபங்களை இலாபக் கணக்கிற்கு	63,585.78	(1,085,961)	249,341	900,206
	205,090,263	**122,147,189**	**68,670,380**	**14,272,694**

கடனாளிகளுக்கான சேதங்களை சரிசெய்தல்

2023.01.01 ஆந் திகதிக்கு	205,026,677
இலாபங்களை இலாபக் கணக்கிற்கு	63,586
இருப்பு பின்$கொ' 2023.12.31	**205,090,263**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைமைக்கான குறிப்புகள்

	2023	2022
	ரூபா'	ரூபா'
குறிப்பு (17		
வைப்பும் எதிர்காலக் கொடுப்பனவும்		
வைப்பு	3,373,618	4,653,854
முற்பணம் செலுத்துதல்	1,024,576	499,034
நலன்புரி சங்கத்திற்கு இறுதிச் சடங்குகளுக்கான முற்பணம்	70,000	-
	4,468,194	5,152,888
கடன்களுக்கான இழப்பீடுகளைச் சரிசெய்தல்	(13,500)	(653,728)
	4,454,694	4,499,160
குறிப்பு (18		
பணம் மற்றும் வங்கி இருப்பு		
மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-1-0208647	3,206,242	588,542
மக்கள் வங்கி - ந.க. இல. 055-1-001-5-0667533	270,605	1,690,173
மக்கள் வங்கி - ந. க. இல. 004-1-001-6-0208664	19,376,623	5,585,038
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323272	6,206,832	1,670,951
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323131	906,769	936,902
இலங்கை வங்கி - ந.க. இல. 0002323354	70,424,182	34,981,111
இலங்கை வங்கி - ந. க. இல. 0002323363	35,786,312	12,701,701
இலங்கை வங்கி - ந. க. இல. 0005002189	116,591	3,370,426
இலங்கை வங்கி - ந. க. இல. 5152460	-	-
	136,294,155	61,524,844
கையிருப்பில் உள்ள பணம்	420	34
03 மாதங்களில் முதிர்ச்சியடையும் வைப்புத்தொகை		
REPO வைப்புத்தொகை	-	-
திறைசேரி உண்டியல்கள்	293,617,082	20,800,938
நிலையான வைப்பு	-	148,355,855
	293,617,082	169,156,793
மொத்தம்	429,911,657	230,681,670
குறிப்பு (19		
மானியங்கள்		
திறைசேரி உண்டியல்கள்	152,417,553	114,731,345
^-& பணப் பெறுமதி நீக்கம்	(12,243,055)	(12,313,792)
	140,174,497	102,417,553
மோட்டார் வாகன மானியம்	10,200,000	13,600,000
^-& பணப் பெறுமதி நீக்கம்	(3,400,000)	(3,400,000)
	6,800,000	10,200,000
மொத்தம்	146,974,497	112,617,553

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைக்கான குறிப்புகள்

	2023	2022
	re'	re'
குறிப்பு (20		
பணிக்கொடைக்கான ஒதுக்கீடு		
முன்கொண்டு வரப்பட்ட இருப்பு - 2023.01.01	48,934,784	49,002,597
2023 இற்கு முன்னைய சீராக்கம்	1,934,166	660,280
ஆண்டிற்கான ஒதுக்கீடு	1,907,458	2,009,657
பணச் செலுத்துகை	(6,341,446)	(2,737,750)
	46,434,961	**48,934,784**
குறிப்பு (20-1		
எதிர்வரும் 12 மாதங்களின் பின்னர் செலுத்தல்	45,504,001	44,214,794
குறிப்பு (20-2		
எதிர்வரும் 12 மாதங்களினுள் செலுத்தல் (2023.12.31 வரை)	930,960	4,719,990

		2023	2022
குறிப்பு (21			
வைப்பு			
NFC திரையரங்குகளின் பிணை வைப்பு		451,272	475,272
சிற்றுண்டிச்சாலை வைப்பு		-	30,000
பாதுகாப்பு வைப்பு -	திரையரங்குகள்	584,238	2,326,727
	ஊழியர்	5,000	5,000
	திரைப்பட இறக்குமதி	10,000	7,500
	சினிமாத் திட்டம்	-	45,000
	சுகாதாரச் சேவைகள்	160,000	160,000
	டென்டர் வைப்பு	124,000	-
		1,334,510	**3,049,499**

	2023	2022
குறிப்பு (22		
திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள்		
திரைப்பட வாடகை கடன் வழங்குநர்கள்	406,661,704	330,280,811
^-& கடன் வழங்குநர்களுக்கான இழப்பீட்டை சரிசெய்தல்	-	(18,046,804)
	406,661,704	**312,234,007**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்
2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான
நிதி நிலைக்கான குறிப்புகள்

	2023 ரூபா'	2022 ரூபா'
குறிப்பு (23		
நிதிப் பொறுப்புகள்		
திரட்டிய செலவுகள் (குறிப்பு இல. 2.10)	45,723,159	44,917,713
	45,723,159	**44,917,713**
குறிப்பு (24		
பிற கடன் வழங்குநர்கள்		
செலுத்தப்பட வேண்டிய மதிப்பு கூட்டப்பட்ட வரி	-	152,612
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடுகள்	3,200,000	2,200,000
இறைவரி ஆணையாளர் (முத்திரைகள்)	15,798	30,673
உரிமை கோரப்படாத ஊதியங்கள்	923,683	539,152
E. P. F.	591,842	591,842
E. T. F.	70,375	70,375
இதர கடன் வழங்குநர்கள்	95,495	759,734
^-& செலுத்தப்படாத பொறுப்புக்களுக்கான ஒதுக்கீடு	-	(644,840)
தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் (2.11)	3,525,795	3,525,795
ரித்மா சேர்கிட் நிர்வாகக் கணக்கு	11,932,180	35,504,261
உழைக்கும் போது வரி செலுத்தல்	38,253	38,253
சம்பளங்கள் மற்றும் ஊதியங்களுக்கான ஒதுக்கீட்டுக் க	-	577,190
பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபை	114,801	114,801
எதிர்வரும் ஆண்டிற்கான திறைசேரி உண்டியல் வட்டி	21,064,126	-
சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட்	976,303	976,303
தேசிய திரைப்பட விழாவிற்கான ஒதுக்கீடு	45,000,000	35,000,000
தேசிய திரைப்பட விழாவிற்கான ஒதுக்கீடு	-	50,000
ஊழியர் கடன் பொறுப்புக் கணக்கு	2,848,384	-
	90,397,035	**79,486,152**

பணிப்பாளர் சபை - 2023

	பெயர்	பதவி	முகவரி
1	சட்டத்தரணி திரு. பி.எம். தீபால் ஷந்திரத்ன (2022.08.08 முதல்)	தலைவர், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்	இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனம், இல. 303, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07.
2	திரு. தினித் ஷிந்தக கருணாரத்ன (2022.09.15 ஆந் திகதியிலிருந்து)	அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் - அரசாங்க தகவல் திணைக்களம்	அரசாங்க தகவல் திணைக்களம், கொழும்பு 05.
3	திரு. நளின் குமார நிஸ்ஸங்க (2022.08.10 ஆந் திகதி முதல் 2023.10.31 வரை)	பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம் கொழும்பு 07.
	திருமதி. பி.யூ.ர். வருஷவிதான (2023.11.21 முதல்)	பணிப்பாளர் நாயகம் - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்	இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம் கொழும்பு 07.
4	திருமதி. பாக்கியா சீ. கடுதெனிய (2023.02.28 திகதி முதல் 2023.07.15 வரை)	கலாச்சார் அலுவல்கள் பணிப்பாளர் - கலாச்சார அலுவல்கள் திணைக்களம்	கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 வது மாடி செத்சிரிபாய, பத்தரமுல்ல.
	திருமதி. வை.டீ.ஐ. குணவர்தன (2023.08.29 முதல்)		
5	ஜனாதிபதி சட்டத்தரணி திரு. ஜகத் விக்கிரமநாயக (2022.10.14 ஆந் திகதி முதல்)	ஜனாதிபதி சட்டத்தரண	1174, தம்மோதய மாவத்தை, பத்தரமுல்ல.
6	திரு. ஏஷ்லி ரத்னவிபூஷண (2022.08.08 ஆந் திகதி முதல்)	சினிமாத் துறையைப் பிரதிநிதிப்படுத்துபவர்	118, தெஹிவல, பொரலஸ்கமுவ..
7	நதீகா குணசேகர (2022.08.08 ஆந் திகதி முதல்)	சினிமாத் துறையைப் பிரதிநிதிப்படுத்துபவர்	இல.552 பீ, வெஸ்ட்பெரி பார்க், விஜேசிங்க மாவத்தை, பெலவத்த, பத்தரமுல்ல.
8	சிரேஷ்ட பேராசிரியர் திரு. சமந்த ஹேரத் (2023.03.15 ஆந் திகதி முதல்)	பிரிவுத் தலைவர், தொடர்பாடல் மற்றும் படைப்பாற்றல் கலைப் பிரிவு, கலைப் பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்	தொடர்பாடல் மற்றும் படைப்பாற்றல் கலைப் பிரிவு, கலைப் பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம், த.பெ. 1490, கொழும்பு 03.
9	கலாநிதி திரு. உதித குணசேகர (2023.03.15 ஆந் திகதி முதல்)	மானிடவியல் பீடம், களணி பல்கலைக்கழகம்	களணிப் பல்கலைக்கழகம், தளுகம, களணி.
10	திரு.பி.பி.எஸ்.ஆர் த சில்வா (2022.11.09 ஆந் திகதி முதல் 2023.09.18 வரை)	பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (திறைசேரிப் பிரதிநிதி)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், செயலகம் (3 ஆம் மாடி),, கொழும்பு 01.
	திரு. டீ.பி.ஜீ. பிரதீப் (2023.09.18)	பணிப்பாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் (திறைசேரிப் பிரதிநிதி)	வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், செயலகம் (3 ஆம் மாடி),, கொழும்பு 01.

CAA/D/SNFC/1/2023/69 2024 ஒக்டோபர் 09 ஆந் திகதி

தலைவர்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம்

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக 2018 இலக்கம் 19 இனைக் கொண்ட தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி கணக்காய்வு தலைமை அதிபதியின் அறிக்கை

---

1. **நிதிக் கூற்று**

1.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கான தகுதியுடைய கூற்று, அத்திகதியுடன் நிறைவடையும் ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் அறிக்கை மற்றும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் படி எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

எனது இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் விளைவுகள் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டு திசெம்பர்

மாதம் 31 ஆந் திகதிக்கான நிதி நிலைமைகள் மற்றும் அத்திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றுகையையும் காசுப் பாய்ச்சிலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியம அடிப்படைகளுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(அ) இலங்கை கணக்கீட்டு தர நியம இலக்கம் 10 இன் 03 மற்றும் 08 ஆம் பந்தியின் படி நிதிக் கூற்று அறிக்கையிடப்படும் திகதி மற்றும் நிதிக் கூற்றினை சமர்ப்பிப்பதற்கான பணிப்பாளர் சபையின் ஒப்புதல் கிடைக்கப்பெறும் திகதிக்கிடையிலான காலத்தில், நிதிக் கூற்றினை அறிக்கையிடப்படும் திகதிக்கு நிலவிய நிலைமை தொடர்பில் ஆதாரங்களை முன்வைக்கும் கொடுக்கல் வாங்கல் முன்னைய நிதிக் கூற்றில் செம்மையாக்கம் செய்யப்பட வேண்டியிருந்தும், கீழே காட்டப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி மத்தியஸ்தம் செய்யப்பட்டிருந்த முன்னாள் உதவிப் பொது முகாமையாளரினால் (கொடுப்பனவு) கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்வுக்கு ஏற்ப செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,255,225 ஆன இழப்பீட்டுத் தொகையைச் செலுத்துவதற்கு 2024 சனவரி மாதம் 02 ஆந் திகதி நடைபெற்ற 1218 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தும், கணக்கீட்டு தர நியமத்தின் படி அவ்வாறு செலுத்தப்பட வேண்டிய இழப்பீட்டுத் தொகை நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திரையரங்குகளின் உரிமையாளர்களினால் 1999 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 07 ஆந் திகதி களுத்துரை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்குரித்தாக 2024 மார்ச் மாதம் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த தீர்ப்புக்கு ஏறப திரையரங்கு உரிமையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,131,619 ஆன தொகையுடைய இழப்பீட்டுத் தொகையை வழங்குமாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் தர நியமங்களின் படி அவ்விழப்பீட்டு தொகை நிதிக் கூற்றுகளில் செம்மையாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு பல்வேறு நீதிமன்றங்களில் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற, கூட்டுத்தாபனம் பிரதிவாதியாகவும் மற்றும் வெளித் தரப்பினரால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள வழக்குத் தாக்கல் நடவடிக்கைகள் 12 உம், தொழில்முறை முறைப்பாடுகள் 02 உம், மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 08 முறைப்பாடுகளும், உள்ளிட்ட 22 வழக்குகளுக்குரிய சம்பவங்கள் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு தர நியமம் 37 இன் படி வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான இலக்கம் 224/1 இனைக் கொண்ட இடத்தில் பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபையினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தின் பெறுமதி மதிப்பிடப்பட்டு சொத்து, இயந்திராதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை. மேலும் பகிரங்க நாடக கட்டுப்பாட்டுச் சபைக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ள இந்த கட்டிடத்திற்கு உரித்ன குத்தகை ஒப்பந்தத்தின் படி 2019 ஆம் ஆண்டு முதல் 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் ரூபா, 24,950,000 ஆன தொகையாக இருந்தாலும், குத்தகை ஒப்பந்த நிபந்தனைகளின் படி குத்தகை வாங்குநர்களினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடத்துக்கு செலவிடப்பட்டுள்ள தொகையை தீர்ப்பதற்காக 15 வருடங்களுக்கு அதிகபட்சத்தின் கீழ் மாதாந்த குத்தகை வாடகையில் நூற்றுக்கு 80 ஆன தொகையை கழித்துக் கொள்ளப்பட வேண்டும் என உடன்பட்டிருப்பதன் காரணமாக குத்தகை பெறுநர்களினால் செலுத்தப்பட்டுள்ள நூற்றுக்கு 20 ஆன தொகை மாத்திரம் வருமானமாக கணக்கிடப்பட்டிருப்பதன் காரணமாக ஆண்டின் வருமானமாக ரூபா 4,320.000 ஆன தொகை மற்றும் திரட்டிய இலாபம் ரூபா. 15,640,000 ஆன தொகையில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) ஊழியர் கடன் அட்டவணையில் பழைய நிலுவையாக காட்டப்பட்டுள்ள ரூபா. 539,222 ஆன தொகை கண்டறியப்படாத நிலுவைக்கு உரித்தான விஸ்தீரணமான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தினால் அந்நிலுவைகளின் துல்லியத்தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு 36 மாணவர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 1,110,000 ஆன தொகை திரைப்படவியல் தொடர்பான டிப்ளோமா பாடநெறிக் கட்டணம் மீளாய்வு ஆண்டில் வருமானமாக கணக்கில் பதியப்பட்டிருக்காத காரணத்தினால்

ஆண்டின் வருமானம் மற்றும் பெறப்பட வேண்டிய வருமானம் அப்பெறுமானத்தில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) ஊழியர் சேமலாப நிதியத்தில் ரூபா. 591,842 ஆன ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் ரூபா. 70,375 ஆன தொகையும் மொத்தமாக ரூபா. 662,217 ஆன தொகை நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் பிற கடன் வழங்குநர்களாக கணக்கில் பதியப்பட்டிருந்தும், அந்நிலுவைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஆதாரங்கள் இல்லை.

(எ) நிதி நிலை தொடர்பாக கூற்றில் பிற கடன் வழங்குநர்களின் கீழ் ரித்மா சபை நிர்வாகக் கணக்காக ரூபா. 11,932,180 ஆக காட்டப்பட்டிருந்தும் அதற்கு உரித்தாக நிரூபிப்பதற்கு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததால் அதன் துல்லியத்தன்மையை பரீட்சித்துப் பார்ப்பதற்கு கணக்காய்வினால் முடியாதுள்ளது.

(ஏ) எதிர்வரும் கொடுப்பனவு கணக்கு நிலுவையினுள் உள்ளடக்கிய 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் செலுத்தப்பட்ட ரூபா. 484,033 ஆன தொகையும்,. அந்தந்த ஆண்டுகளில் கணக்குகளில் சீராக்கம் செய்யப்படாமை காரணமாகவும் ஆண்டின் இலாபம் ரூபா. 396,590 ஆன தொகையால் முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா. 87,443 ஆன தொகையாக நிதி நிலைக் கூற்றில் நடைமுறைச் சொத்தாக ரூபா. 484,033 ஆன தொகையால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2020 ஆண்டில் களணி சரசவி கலையகத்தின் பெயர்ப் பலகையை பொருத்துவதற்கான கட்டளைப் பெறுமதி ரூபா. 450,000 ஆன தொகை முடிவடையாத கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டு திரட்டிய செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டுள்ளதோடு, 2023 ஆம் ஆண்டில் அக்கட்டளையை இரத்துச் செய்யப்பட்டதன் அடிப்படையில் அப்பெறுமதி முடிவடையாத வேலை கணக்கில் இருந்து பதிவழிக்கப்பட்டு கட்டிடக் கணக்கிற்கும், திரட்டிய செலவு கணக்கில் இருந்து பதிவழிக்கப்பட்டு முன்னைய ஆண்டின் இலாக கணக்கிலும் கணக்குப் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக கட்டிடத்தின் பெறுமதி ரூபா. 450,000 ஆன தொகையாலும், திரட்டிய இலாபம் அப்பெறுமானத்தினை விடக் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது. மேலும் அதன் அடிப்படையில் ரூபா. 112,500 ஆன நிலுவையை ஒதுக்கியதால் வருடத்தின் நிலுவை மற்றும் தேய்மானத்தை ஒதுக்கும் கணக்கில் நிலுவை அப்பெறுமானத்தை விடக் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விஸ்தீரணமான அட்டவணையின் படி 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரையரங்கின் கடனாளி நிலுவை ரூபா. 418,123,560 ஆக இருந்தாலும், அத்திகதிக்கு நிதி நிலைக் கூற்றின் படி அந்நிலுவை ரூபா. 389,961,318 ஆன தொகை நிலுவையாக காணப்பட்டதோடு, ரூபா. 28,162,242 ஆன தொகையில் வித்தியாசம் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஓ) கணக்காய்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு கடனாளி நிலுவை ரூபா. 445,402,401 ஆன தொகையாக இருந்தாலும் அத்திகதிக்கு நிதிக் கூற்றின் படி நிலுவை ரூபா. 406,661,704 ஆன தொகையாக காட்டப்பட்டுள்ளதால் ரூபா. 38,740,697 ஆன தொகையில் மாற்றம் இருப்பதாக அவதானிக்கப்பபட்டுள்ளது.

(ஔ) திரைப்பட இறக்குமதி, விநியோகித்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகியவற்றை முறைப்படுத்துவதற்கு உரித்தான கணனி அமைப்பை நிறுவும் ஒப்பந்தத்திற்குரிய 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட வேலைத் துவக்கத்திற்கு முற்பணமாக ரூபா. 3,380,000 ஆன தொகையும், முதற் கொடுப்பனவாக ரூபா. 3,943,333 ஆன தொகை மற்றும் வேலைச் சான்றிதழ் எதுவும் பெறப்படாமல் திரட்டிய செலவாக கணக்கிடப்பட்டுள்ள ரூபா. 9,576,667 ஆன தொகை உள்ளடங்லாக ரூபா. 16,900,000 ஆன தொகை ஒப்பந்தமிடப்பட்டு மொத்த தொகையும் முடிவுறாத வேலைக் கணக்கில் பதியப்பட்டிருப்பதன் காரணமாக 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு ரூபா. 5,070,000 ஆன தொகை அதன் நிறைவேற்றப்பட்ட வேலைப் பெறுமதியில் ரூபா. 11,830,000 இனால் கூடுதலாகவும், முடிவுறாப் பணிகள் கணக்கில் பதியப்பட்டிருந்தன. வேலை சான்றுப்படுத்தலின்றி திரட்டிய செலவாக கண்டறிய முடியாதுள்ளதால் கூட்டுத்தாபனத்தினால் வேலை சான்றுப்படுத்தாத ரூபா. 9,576,667 ஆன தொகை திரட்டிய செலவாக கண்டறியப்பட்டுள்ளதோடு, அறவிடப்பட வேண்டிய வேலை ஆரம்பிப்பதற்கான முற்பண நிலுவையான ரூபா. 2,253,333 ஆன முற்பணக் கணக்கில் தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

(க) 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்திற்கு பணமாக கிடைக்கப்பெற்ற நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களின் வட்டி வருமானம் ரூபா. 92,237,740 ஆன தொகையாக இருந்தாலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளினால் பெற்ற காசுப் பாய்ச்சலின் கீழ் அந்த வருமானம்

ரூபா. 102,516,380 ஆன தொகையாக ரூபா. 10,278,640 ஆன தொகை கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு அமைவாக (இ.க.த.நி.) இக் கணக்காய்வு என்னால் நடாத்தப்பட்டது. அத்தகைய கணக்கீட்டு தர நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்துக்கான அடிப்படையை வழங்குவதற்கு நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றுகள் போதுமானதென்றும் பொருத்தமானதென்றும் நான் நம்புகிறேன்.

1.3 **கூட்டுத்தாபனத்தின்** 2022 **ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கிய பிற தகவல்கள்**.

இந்தக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆனால் நிதிக் கூற்றில் மற்றும் அது தொடர்பில் எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்கள் எனக் கருதப்படுகின்றது. இந்த பிற தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
நிதிக் கூற்று தொடர்பிலான எனது அபிப்பராயத்தில் பிற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதோடு அது பற்றி எந்த விதத்திலான சான்றுபடுத்தலோ அல்லது அபிப்பிராயமோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்று தொடர்பாக எனது கணக்காய்விற்கு ஏற்ப, மேற்கூறிய அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களைப் பெற முடியுமாக இருந்தால் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது பிற தகவல்கள் நிதிக் கூற்றுடன் அல்லது கணக்காய்வில் அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொண்ட எனது அறிவிற்கு ஏற்ப அளவு ரீதியாக இணங்காதிருப்பது பற்றி கவனிப்பதும் எனது பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2023 ஆம் ஆண்டின் அறிக்கையை வாசிக்கும் போது, இந்த பிற தகவல்களில் போதுமானளவு பிறழ் கூற்றுகள் பதியப்பட்டுள்ளதாக நான் யூகித்தால், அவற்றை நிவர்த்தி செய்வதற்காக என்னால் கட்டுப்பாட்டுத் தரப்பினருக்கு அந்த விடயங்களை அறிவிக்க வேண்டியுள்ளது. மேலும் சரிசெய்யப்படாத பிழைகளட குறிப்பிடப்பட்டிருப்பின், அவற்றினை அரசியலமைப்புச் சட்டத்தின் 154 (6)

ஆம் உறுப்புரையின் படி என்னால் உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் முன்னளிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளது.

1.4 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் கட்டுப்பாட்டுத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிநிலை அறிக்கைகள் பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் உண்மையாகவும், நியாயமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்ற வகையிலும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகக் காணப்படுவதோடு, முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை கலைக்கக் கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் என்ற அடிப்படையில் கணக்குகளைப் பதிவிடல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைப்பாட்டுக்குரிய விடயங்களை கண்டறிவதற்கும் முகாமைத்துவம் பெறுப்பாக இருக்கும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையுடன் தொடர்புடைய பரீட்சிப்புக்களுக்கான பொறுப்புக்கள், ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்த நிதிக் கூற்றில், மோசடி அல்லது தவறினாலான முக்கிய பிறழ் கூற்றேதும் இல்லையென்ற நியாயமான உறுதிப்படுத்தலை பெற்றுக்கொள்வதும் எனது கருத்துரையை உள்ளடக்கி கணக்காய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்படுத்தலானது உயர்மட்ட உறுதிப்படுத்தலாக இருந்தாலும், குறித்த கணக்காய்வு இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கமைவாக நடத்தப்பட்டதாக உத்தரவாதப்படுத்தப்படாது. அவ்வாறே, ஏதாவது பிறழ் கூற்றுக்கள் இருந்தால் அது தொடர்பாக கண்டறியப்படும் . பிறழ் கூற்றுக்களில் மோசடி அல்லது தவறிலிருந்து ஏற்பட முடியுமென்பதுடன், தனிப்பட்ட ரீதியாகவோ அல்லது கூட்டாகவோ நிதிக் கூற்றுக்களின் அடிப்படையில் எடுக்கப்படும் பொருளாதாரத் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்துவதாயின் அவை முக்கியமானவை என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்விடல் தர நியமங்களுக்கேற்ற விதத்திலான கணக்காய்வின் ஒரு பகுதியென்ற வகையில் நான் கணக்காய்வு முழுவதிலும் தொழில்சார் நீதியை பிரயோகிப்பதுடன் தொழில்சார் சந்தேகங்கள் நிலவுவதாகவும் காணப்படுகின்றது. மேலும்,

- வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்தினை அடிப்படையாகக் கொண்டு மோசடி அல்லது தவறின் காரணத்தினாலான நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான முக்கியமான பிறழ் கூற்றின் ஆபத்துக்களை இனங்காணல் அல்லது மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களின் போது உசிதமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டு மோசடி அல்லது தகவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துக்களை விடுவித்துக் கொள்வதற்கும், போதிய மற்றும் உசிதமான கணக்காய்வுச் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு எனது அபிப்பிராயத்தின் அடிப்படையாகவும் உள்ளது. மோசடியின் விளைவினாலான ஆனால் கண்டறியப்படாத முக்கிய பிறழ் கூற்றின் ஆபத்தானது தவறினாலான ஆபத்தினை விடவும் மிகவும் பாரதூரமானது. ஏனெனில், மோசடியானது கூட்டுச் சக்திக்கும், உள்நோக்குடைய புறக் கணிப்புக்களுக்கும், பிறழ் கூற்றுக்களுக்கும் அல்லது உள்ளக கட்டுப்பாடு மீறப்படுவதற்கும் காரணமாக அமையும்.

- கூட்டுத்தாபனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் வினைதிறன் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் நோக்கத்திற்கல்லாது, சூழ்நிலைகளுக்குப்

பொருத்தமான கணக்காய்வுச் செயன்முறைகளை திட்டமிடுவதற்காக கணக்காய்வுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கத்தினை நான் பெற்றுக்கொள்கிறேன்.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாட்டினையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தையும் முகாமையினால் வெளிப்படுத்தப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களையும் நான் மதிப்பீடு செய்கிறேன்.

- நிறுவனமாக தொடர்வதற்கு இயலுமையில் குறிப்பிடத்தக்க சந்தேகம் ஏற்படுத்தும் நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய முக்கியமான நிச்சயமற்ற தன்மை காணப்படின், கணக்கீட்டின் படி இயங்கும் நிறுவன அடிப்படையை முகாமை பயன்படுத்தும் விதத்திற்கேற்பவும் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் படியும் முடிவெடுக்கின்றேன். முக்கியமான ஏதோவொரு நிச்சயமற்ற தன்மை காணப்படுவதாக நான் முடிவெடுத்தால் நிதிக் கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்களுக்கான எனது கணக்காய்வாளர் அறிக்கையில் உரிய கவனம் செலுத்துமாறு வேண்டிக் கொள்ளப்படுவதுடன், அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதியளவில் இல்லாதிருந்தால் எனது கருத்தை மாற்றுமாறு நான் வேண்டப்படுவேன். எனது முடிவுகள் யாவும் எனது கணக்காய்வு அறிக்கையின் திகதி வரையில் நான் பெற்றுக்கொண்ட கணக்காய்வுச் சான்றின் அடிப்படையிலேயே இருக்கும். எனினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைகள் நிறுவனம் இயங்கும் நிறுவனமாக தொடர்வதிலிருந்தும் நிறுத்தப்படுவதற்கு காரணமாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களின் முன்வைப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு றெய்யப்பட்டுள்ளதோடு, அதற்கு அடிப்படையான பரிவர்த்தனைகளையும் நிகழ்வுகளையும் உசிதமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்டுள்ள முக்கிய கணக்காய்வு தேடல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டிலுள்ள குறைபாடுகள் உள்ளடங்கலாக ஏனைய விடயங்களுடன் குறிப்பிடத்தக்க நிர்வாகம் தொடர்பாக சாட்டப்பட்டுள்ளவர்களுடன் நான் கலந்துரையாடுகிறேன்.

2. பிற சட்டரீதியான மற்றும் ஒழுங்குவிதி தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகள் தொடர்பான விசேட நிதி ஒதுக்கீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12(அ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைய, எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் விளைவு தவிர்த்து, கணக்காய்விற்காக அவசியப்படும் சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது தேடல்களில் காட்டும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தினால் பேணப்பட்டிருந்தன.

2.1.2 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ) (iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தினால் முன்னளிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் ஒத்திசைவாக உள்ளது.

2.1.3 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப எனது அறிக்கையின் அபிப்பிராயத்தின் அடிப்படையில் அப்பகுதியின் 1.2 (இ), (உ), (ஔ) மற்றும் (க) என்ற பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர்ந்து முந்திய வருடங்களில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளையும் உள்ளடக்கியே நிதிக் கூற்றுக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்படும் செயன்முறைகள் மற்றும் பெற்றுக் கொண்ட சான்றின் அடிப்படையில் மற்றும் போதியளவிலான விடயங்களுக்கு வரையறை செய்வதன் மூலம், பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களை முன்வைக்கும் அளவுக்கு எதுவும் எனது அவதானத்திற்கு உட்படவில்லை.

2.2.1 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் ஏவரேனுமொரு உறுப்பினர் அத்தகைய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து ஏதேனும் ஒரு

ஒப்பந்தம் தொடர்பாக நேரடியாக அல்லது வேறு விதத்தில் சாதாரண வியாபார ஏதுக்கு அப்பால் தொடர்பு உள்ளதாகவும்,

2.2.2 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கேற்ப, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்த்து ஏதேனும் ஏற்புடையதான எழுத்திலான அல்லது கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட பணிப்புகளுடன் இணங்கியொழுக வில்லை என கூறுவதற்கும்,

சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிக்குறிப்பு	அவதானங்கள்
(அ) 1971 ஆம் ஆண்டு இலக்கம் 47 இனை கொண்ட இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டம்	
i. 4 (எ) ஆம் பிரிவு	இலங்கையில் தயாரிக்கப்படும் திரைப்படங்களுக்காக இலங்கையினுள் மற்றும் அதற்கு வெளியே கேள்வி மற்றும் திரைப்பட சந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் கூட்டுத்தாபனம் போதுமானளவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
ii. 4 (ஏ) ஆம் பிரிவு	இலங்கையினுள் மற்றும் இலங்கைக்கு வெளியேயான திரைப்படங்கள் தொடர்பில் சந்தை ஆய்வுகளை நடத்துகின்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் குறிப்பின்	
i. நிதிப் பிரமாணம் 177(1)	அன்றாடம் கிடைக்கப்பெறும் நிதியை நாளாந்தம் அல்லது மிக விரைவில் வங்கியில் வைப்பிலிட வேண்டும்

	என்றாலும் நடைமுறைக் கணக்கிற்கு உரிய 2023 ஏப்ரல் மாதம் தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற ரூபா. 747,638 ஆன தொகை நிலுவை 01 நாள் தொடக்கம் 03 மாதங்களுக்கு கையில் வைத்திருந்து வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது.
ii. நிதிப் பிரமாணம் 540	தினசரி கொடுக்கல் வாங்கல்களின் இறுதியில் பணத்தின் சரி பிழை தன்மை பார்க்கும் விடயம் இடம்பெற்றிருக்கவில்லை என்பதுடன் அன்றாடம் கையிருப்புப் பணம் மற்றும் வங்கியிலிடுதல் தொடர்பில் துல்லியத்தன்மை பொறுப்புடைய உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.
(இ) இலங்கை சனநாய 12சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 15:1(ix) ஆம் பிரிவு மற்றும் 2012 செப்டம்பர் மாதம் 14 ஆந் திகதிய கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை	குறிப்பிடப்பட்ட திகதியில் வினைத்திறன் காண் தடைப் பரீட்சையை நடத்துவதற்காக நியமன அதிகாரியும், திணைக்கள தலைவரும், இணைப் பெறுப்புடையவர்கள் என்பதோடு, ஆட்சேர்ப்பு நடைமுறையில் அங்கீகரிக்கப்பட்ட 2012 செப்டம்பர் மாதம் 14 ஆந் திகதி முதல் இதுவரை எந்தவொரு வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சையும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ) 2021 நவம்பர் மாதம் 16 ஆந் திகதிய அரசாங்க வர்த்தக சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் படி குறிப்பிடப்பட்ட செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பிரிவு	நிதியாண்டு முடிவடைந்து 05 மாதங்களினுன் வருடாந்த அறிக்கைக்கு உரித்தான செயலாற்றுகை அறிக்கையுடன் பாராளுமன்றத்தில் முன்னளிப்புச் செய்யப்பட வேண்டியிருந்தும்,

	கூட்டுத்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டுக்குப் பதிலாக வருடாந்த அறிக்கை 2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆந் திகதி வரை முன்னளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.
(உ) 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆந் திகதி அரசாங்க வர்த்தக சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இல் குறிப்பிடப்பட்டுள்ள அரச வர்த்தகத்திற்கான நல்லாட்சி வழிகாட்டல் குறிப்பின் 2.3 ஆம் பந்தி	கூட்டுத்தாபனத்திற்கான மூலோபாயத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 12 (எ) பிரிவின் படி தேவைப்பாட்டுக்கு ஏற்ப கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அவதானங்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் அதிகாரம், தத்துவங்கள் மற்றும் அதன் தொழிற்பாடுகளுக்கு இணங்காத வகையில் தொழிற்பட்டுள்ளது எனக் கூறுவதற்கும்.

2.2.4 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 (ஏ) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பின்வரும் விடயங்கள் அவதானிப்புக்கள் தவிர்ந்த கூட்டுத்தாபனத்தின் வளங்களை சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்தாகவும் குறிப்பிட்ட காலப்பகுதியினுள் உரித்துடைய சட்ட விதிகளுக்கு ஏற்புடையதாக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டு பயன்படுத்தப்படவில்லை எனவும்,

(அ) பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 8.9.1 ஆம் பந்தியின் படி ரூபா. 500,000 இனை விஞ்சிய பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுகை செய்யும்போது முறைசார்ந்த எழுத்து மூல ஒப்பந்தமொன்றுக்கு வருதல் வேண்டும் என்றாலும், ரூபா. 800,650 ஆன தொகை அன்றாட அறிக்கைப் பதிவேட்டில் 670 ஆன தொகைக்கு கொள்வனவு செய்வதற்குரிய எழுத்து ரீதியான ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1000 அன்றாட அறிக்கைப் புத்தகங்களை அச்சிடுவதற்கான 02 சந்தர்ப்பங்களிலும் ரூபா. 1,267,435 ஆன தொகை செலவிடப்பட்டுள்ளதோடு,

அரசின் பெறுகை வழிகாட்டல் குறிப்பின் 7.1 ஆம் பந்தியின் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விலை மனுக் கோரலை மதிப்பிடப்பட்டிருக்கவில்லை.

2.3 **பிற விடயங்கள்**

(அ) நிறுவனமொன்று இலக்குகளை அடைந்து கொள்வதற்காக சிறந்த பணியாட்தொகுதியினரைக் கொண்டிருப்பது கட்டாயமானதாகும் என்பதோடு ஊழியர் குழாத்தில் குறைபாடு நிலவுதல் அந்நிறுவனத்தின் வினைத்திறன் பாதிப்புக்கு உட்படும் என்பதோடு, பணிக்குழாம் வெற்றிடமாதல் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கையை பயனுறுதி வாய்ந்த்தாக நடைமுறைப்படுத்தி முன்கொண்டு செல்வதற்கு நேரடியாக தாக்கம் செலுத்துவதாக இருந்தாலும், அதுபற்றி கவனம் செலுத்தப்படாது அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் 04 பேரினை சனாதிபதி செயலத்திற்கு ' விடுவிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் மாதம் 18 ஆந் திகதி முதல் 2024 மே மாதம் வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளாக ரூபா. 4,952,766 ஆன தொகை செலுத்தப்பட்டுள்ளதோடு 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மீள்நிரம்பல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவி வருகின்ற கூட்டுத்தாபனத்தின் நலன்புரிச் சங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 354,000 ஆன தொகை மற்றும் தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தினால் காட்சிப்படுத்தப்பட்ட திரைப்படங்களுக்கு கிடைக்கப்பெற வேண்டிய ரூபா. 1,360,404 ஆன தொகை அறவிட முடியாதுள்ள நிலுவையினுள் பதியப்பட்டுள்ளதோடு, கூட்டுத்தாபனத்தின் உள்ளகப் பிரிவுக்கு இடையில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த இந்த கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தம் ரூபா. 870,659 ஆன தொகையுடைய திரைப்படச் சுருள் மற்றும் இரசாயனக்கூட பொருட்களின் இருப்பு 2014 ஆம் ஆண்டில் இருந்து காலாவதியாதல் மற்றும் தற்போது பயன்படுத்தாத காரணத்தினால் பயன்பாட்டில் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதோடு, முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் எடுத்துக்

காட்டப்பட்டிருந்தும், இந்த செயற்பாட்டில் இல்லாத சொத்துக்களை நீக்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு திரைப்படத் தயாரிப்பு மற்றும் திரையரங்குகளை நவீனமயப்படுத்தலுக்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையின் மொத்தம் ரூபா. 83,503,920 ஆகவும் மற்றும் திரையரங்குகளில் இருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைத் தொகை ரூபா. 389,961,318 உள்ளடங்களாக மொத்தம் ரூபா. 478,465,238 ஆன தொகை கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கப் பெறவேண்டியிருந்தது. அம் முழுப் பணத் தொகையில் மொத்தம் ரூபா. 356,646,954 ஆன தொகை மேலதிக மற்றும் சேதங்களுக்கான சீராக்கம் காரணமாக 2023 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய தேறிய கடன் நிலுவை ரூபா. 121,818,284 ஆன தொகை அதாவது மொத்த கடனாளிகளிடமிருந்து நூற்றுக்கு 25.46 ஆகக் காணப்பட்டது. முகாமைத்துவத்தினால் கடனை அறவிட்டுக் கொள்வதற்கு போதுமானளவு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என்பதன் காரணமாக இந்த கடன் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) கலாநிதி "லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ்" அவர்களின் பெயரில் கூட்டுத்தாபன வளாகத்தில் அருங்காட்சியகம் மற்றும் நூலகமொன்றின் கட்டிட நிர்மானிப்பதற்காக நிர்மான மற்றும் ஆலோசனை நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி ரூபா. 99,965,061 ஆன தொகை ஆலோசனை நடவடிக்கைகளுக்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைப்பதற்கு இரு தரப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்காக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதி அதன் நிர்மானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. மாநகர அபிவிருத்தி அதிகார சபையின் மற்றும் அமைச்சரவை அங்கீகாரம் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த கட்டிட நிர்மானப் பணிகள் தொடர்பில் 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிக்கு மொத்தம் ரூபா. 3,134,107 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய வருட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இந்த நிர்மானப் பணிகள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திலிருந்து கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருவதோடு, நிர்மானப் பணிகளை ஆரம்பித்துள்ள இந்த கட்டிடத்தில் உள்ள கம்பிகள் மிக மோசமான நிலையில் சேதங்களுக்கு உட்பட்டுள்ளதால் கட்டிடம் அழிவுற்று வருகின்றது.

(ஊ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைப்படங்களை விநியோகிக்கும் விலைக் கழிவுத் தொகை கூட்டுதாபனத்தின் பிரதான வருமான மூலமாக

காணப்படுவதோடு, நீண்ட காலமாக தனியார் நிறுவனங்களின் மூலம் திரைப்பட விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இலக்கம் අමප/21/1024/305/022 மற்றும் 2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் முலம் திரைப்பட விநியோகம் மற்றும் காட்சிப்படுத்தலுடன் தொடர்புடைய ஒழுங்கு முறையை கூட்டுத்தாபனம் பொறுப்பேற்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தும் கணக்காய்வு திகதியான 2024 ஆம் ஆண்டு மே மாதம் வரை மேற்கூர்ந்த விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு கூட்டுதாபனத்தின் உயர் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு புறம்பாக, முன்னாள் ஊடகவியல் உத்தியோகத்தருக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 1,347,011 ஆன பணிக்கொடை தொகையைச் செலுத்துவதனை கூட்டுத்தாபனம் இடைநிறுத்தி உள்ளதோடு, ஒரு வருடத்துக்கு மேலதிகமாக கொடுப்பனவை தாமதப்படுத்தியதன் காரணமாக சட்டத்தின் II ஆம் பகுதியின் 4 (1) (உ) பிரிவின் படி ரூபா. 404,103 ஆன மேலதிக கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருந்தும் முகாமைத்துவத்தின் செயற்திறனின்மை காரணமாக அம்மேலதிகக் கொடுப்பனவை செலுத்துவதனால் கூட்டுத்தாபனம் நட்டத்தை ஏற்றிருந்தது.

(ஏ) 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் வரை முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா. 15 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 2021 ஆம் ஆண்டின் செயற்பாட்டு திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்த திரைப்பட இறக்குமதி, விநியோகித்தல் மற்றும் பதிவு செய்தலினை முறைமையாக்குவதற்குரிய கணனி அமைப்பினை நிறுவும் செயற்பாட்டிற்கு இருதரப்புக்கிடையில் எட்டப்பட்டிருந்த இலக்கம் 4820 மற்றும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆந் திகதி ஆரம்ப ஒப்பந்தத்தின் காலக் கெடு 03 மாதங்களில் நீடிக்கப்பட்டிருந்தும் இப்பணி 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதி வரையில் முடிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் செயற்பாட்டுத் திட்டத்தினுள் இச்செயற்பாடுகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இரு தரப்பினருக்கும் இடையில் எட்டப்பட்டிருந்த 4867 ஆம் இலக்க இறுதி ஒப்பந்தத்தில் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆந் திகதி முடிவடைந்திருந்தும் புதிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வு ஆண்டிற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்புடையதாக செயலாற்றுகை குறித்த முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை பரீட்சித்துப் பார்க்கப்படவில்லை.

(ஒ) அரசாங்க செலவுகளை மிகக் கடுமையாக கட்டுப்படுத்தும் நோக்கில் வெளியிடப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆந் திகதிய தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 08/2022 இன் படி சகல விதத்திலும் விழாக்களை நடாத்துதலுக்குப் பதிலாக தனிப்பட்ட நிறுவனங்களில் உழைப்பினைப் பயன்படுத்தி ஏற்கப்படும் செலவுகளை நிறுத்தப்படல் வேண்டும் என்றாலும், சனாதிபதி விருது வழங்கும் விழாவினை நடாத்தியதன் பின்னரான தினத்தில், அவ்விருது வழங்கும் விழாவுக்கு பங்களிப்புச் செய்த 45 தரப்பினர்களுக்கு தனிப்பட்ட ஹோட்டல் ஒன்றில் நடாத்தப்பட்ட இராப் போஷன உபசரிப்புக்காக ரூபா. 267,030 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஓ) கூட்டுத்தாபனத்தின் உள்ளக கணக்காய்வுப் பதவி 2021 ஆம் ஆண்டு தொடக்கம் கணக்காய்வுத் திகதி வரையில் வெற்றிடமாக நிலவி வருகின்றதால், அதன் காரணமாக உள்ளக கணக்காய்வுப் பிரிவு செயலிழந்து காணப்படுகின்றது.

டப்ளியூ.பி.சீ. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

Printed by : State Printing Corporation